அருண் ஜெய்ட்லி
நாடாளுமன்ற உறுப்பினர்
எதிர் கட்சி தலைவர்
மாநிலங்கலவை

43, நாடாளுமன்ற இல்லம்
புதுதில்லி -110001
தொலைபேசி- ;23016707, 23034883
ஃபேக்ஸ்; 23793433

30,ஜனவரி, 2014

மதிப்பிற்குறிய பிரதமர் அவர்களுக்கு,

என்னுடைய 20, ஜனவரி ,2014 தேதியிட்ட கடிதத்திற்கு ,28 ,ஜனவரி, 2014 தேதியிட்ட கடிதம் மூலம் பதில் அளித்தமைக்கு மிக்க நன்றி.

லோக்பால் தலைவர் மற்றும் இதர உறுப்பினர்கள் நியமனம் தொடர்பாக வெளியிடப்பட்ட விளம்பரம் லோக்பால் மற்றும் லோக் ஆயுக்தா சட்டத்தின் பிரிவு 4 (5) மற்றும் இந்த சட்டத்தின் கீழ் வகுக்கப்பட்ட விதிகளின் பத்தாவது விதிப்படி வெளியிடப்பட்டது என்று உங்கள் பதிலில் குறிப்பிட்டுள்ளீர்கள். மேல்சொன்ன இந்த விஷயம் தொடர்பாக உங்களுக்கு வழங்கப்பட்ட அறிவுரைக்கான அடிப்படையை நான் தீவிரமாக கேள்விக்குள்ளாக்குகிறேன்.

இது தொடர்பான பொருத்தமான பிரிவு 4 (4) தான் தவிர 4 (5 ) அல்ல. இந்த சட்டத்தின் 4 (4) பிரிவு பிவருமாறு குறிப்பிடுகிறது;

' **லோக்பாலின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் தேர்வில்** தேர்வுக்குழுவானது தனது சொந்த வழிமுறைகளை வெளிப்படைத்தன்மையுடன் நெறிப்படுத்திக் கொள்ளும்.'

லோக்பாலின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் தேர்வானது தேர்வுக்குழுவால் நெறிப்படுத்தப்பட வேண்டும் என்று 4 (4) பிரிவு தெளிவாக குறிப்பிடுகிறது. லோக்பால் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் தேர்வு தொடர்பாக வழிமுறைகளை வகுத்துக்கொள்ள தேர்வுக்குழுவுக்கு மட்டுமே அதிகாரம் உள்ளது. எனவே தேர்வுக்குழு, பணியாளர் மற்றும் பயிற்சி தேர்வாணையம் வெளியிட்ட விளம்பரம் மூலம் தேர்வு செய்ய வேண்டுமா அல்லது அமைப்புக்குள் உள்ள சிறந்தவர்களிடம் இருந்து விண்ணப்பங்களை கோர வேண்டுமா என்பது தேர்வு நடைமுறை தொடர்பானது. இந்த கேள்விக்கு தேர்வுக்குழு மட்டுமே பதில் அளிக்க முடியும். தேர்வுக்குழு இன்னும் முழுமையாக அமைக்கப்படவில்லை, இன்னும் கூடவும் இல்லை. ஆக, லோக்பால் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் தேர்வு தொடர்பாக இன்னும் எந்த வழிமுறையும் வகுக்கப்படவில்லை.

பிரிவு 4 (5), பிரிவு 4 (4) - உடன் பொருத்தி பார்க்கப்பட வேண்டியது பிரிவு 4 (4) இல்லாதது போல அல்லது தேவையற்றது போல் அணுகப்படக்கூடாது. இந்த இரு பிரிவுகளையும் பொருத்து வாசிப்பது பிரிவு 4(5) -ன் பொருள் என்னவென்றால் தேர்வுக்குழுவின் உள் செயல்பாடுகள் தொடர்பான குழுவின் பெயர்கள் தேர்வு வழிமுறைக்கான விதிகள் குறித்து மட்டுமே வரையறுக்க முடியும் என்பதாகும். தேர்வுக்கு பின்பற்ற வேண்டிய வழிமுறை வரையறுக்கப்பட்ட விதிகளில் இருந்து விலக்கப்பட வேண்டும். ஏனெனில் பிரிவு 4(4) -ன் கிழ் இது தேர்வுக்குழுவின் உரிமையாகும். அரசு தனது அதிகாரம் மூலம் சட்ட அங்கீகாரம் இல்லாமல் உருவாக்கிய விதிகளின் பத்தாவது விதி , பிரிவு 4 (4) -ன் கீழ் தேர்வுக்குழுவின் அதிகாரத்தை முழுமையாக அழிப்பதாகும்.

சட்டம் தெளிவாக இருக்கிறது. தேர்வுக்கான வழிமுறை தேர்வுக்குழுவால் தீர்மானிக்கப்பட வேண்டும். குழுவுக்கான பட்டியலை தேடல் குழு எப்படி தயார் செய்யும் என்று மட்டுமே விதிகள் தீர்மானிக்கும். இந்த நுட்பமான வேறுபாடு சரியாகப் புரிந்து கொள்ளப்பட வேண்டும். இல்லை என்றால் பிரிவு 4 (4) பயனற்றதாகி விடும்.

எனவே இது தொடர்பாக அரசின் நிலைப்பாட்டை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த பதவிகளை எப்படி நிரப்புவது என்பது தேர்வுக்குழுவின் பணி தேடல் குழுவின் பணி அல்ல.

நன்றியுடைய,

தங்கள் உண்மையுள்ள ‘

அருண் ஜேட்லி.

டாக்டர்.மன்மோகன் சிங்
மேதகு இந்திய பிரதமர்
தெற்கு பிளாக்
புது தில்லி

-----